## மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் - 2014

மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் (சீஈசீபீ) மற்றும் சீஈசீபீ மற்றும் அதன் துணைக்கம்பனி என்பவற்றின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. துணைக் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் உரிய துணைக்கம்பனியின் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்ட பொது நடைமுறையிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்றினால் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

**(அ) முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - தொகுதி**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் மற்றும் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகம் மற்றும் அதன் துணைக்கம்பனியின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**(ஆ) முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - சீஈசீபீ**

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரையறுத்த மத்திய பொறியியல் சேவைகள் (சீஈஎஸ்எல்), சீஈசீபீ இன் துணைக்கம்பனியின் கணக்காய்வாளர்கள் பின்வரும் விடயங்களினை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மீது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தினை வெளிப்படுத்தியிருந்தனர்.

**(i) நிர்மாணிப்பு வருமானம்**

மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்துடன் (சீஈசீபீ) துணைக்கம்பனியால் செய்துகொள்ளப்பட்ட சில நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பிலான ஒப்பந்த உடன்படிக்கைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், ரூபா 8,860,283,658 தொகையான ஒப்பந்தப் பெறுமதியின் சரியானதன்மையை சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. அதற்கிணங்க, ரூபா 860,857,496 தொகையான சீஈசீபீ இடமிருந்தான நிர்மாணிப்பு வருமானமானது நிதிக்கூற்றுக்களில் நியாயமானதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதென குறிப்பிடமுடியாதிருந்தது.

**(ii) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் இருப்புக்கள்**

துணைக்கம்பனி நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்புக்களின் வருடாந்த பௌதீக மெய்மையாய்வின் போது இனம்காணப்பட்ட வித்தியாசங்களிற்காக எவ்வித சீராக்கங்களையும் மேற்கொண்டிருக்காததுடன் பயன்படுத்தக்கூடிய நிலையிலில்லாத நிலையான சொத்துக்கள் மற்றும் இருப்புக்களிற்காக எவ்வித ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருக்கவில்லை. அதற்கிணங்க, இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்: எல்கேஏஎஸ் 36: கழிவுநட்டம் மற்றும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்: எல்கேஏஎஸ் 02: இருப்புக்கள் என்பவற்றிலிருந்து இது வேறுபட்டுள்ளது.

மேலும், துணைக்கம்பனி ரூபா 180,724,757 கிரயத்திலான மொத்தச் சொத்துக்களை மேவுகைசெய்து தலைமை அலுவலகம், பொதுத் தளம் மற்றும் அம்பாறை தளத்திலுள்ள நான்கு செயற்திட்ட வேலைத்தளங்கள் என்பவற்றில் வருடாந்த பௌதீக மெய்மையாய்வினை மேற்கொண்டிருக்கவில்லை.

அத்துடன், களஞ்சிய முகாமைத்துவ முறைமையிலிருந்து பெறப்பட்ட விபரமான மற்றும் சுருக்கமான இருப்பு அறிக்கைகளிற்கிடையில் வேறுபாடுகள் வெளிப்பட்டிருந்ததுடன் நிலையான சொத்துக்களின் பொதுப்பேரேட்டு மீதிகளை களஞ்சிய முகாமைத்துவ முறைமையின் மீதிகளில் நேரடியாக இனம்காண முடியாதிருந்தது.

அதற்கிணங்க, நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் இருப்புக்களின் உள்ளதன்மை, சரியானதன்மை, மதிப்பீடு மற்றும் பூரணத்தன்மை என்பன தொடர்பில் என்னால் திருப்திகொள்ள முடியாதுள்ளது.

**2.3 பணியகத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் (சீஈசீபீ)**

**2.3.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடனான (எல்கேஏஎஸ்) இணக்கம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எல்கேஏஎஸ் 11 – நிர்மாண ஒப்பந்தம்**

ஒவ்வொரு ஒப்பந்தத்திற்காகவும் தனித்தனியான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு ஒவ்வொரு சொத்தினதும் கிரயம் மற்றும் வருமானத்தை தனித்தனியாக இனம்காண்பதற்கான சாத்தியத்தன்மை இருந்த போதிலும் நியமத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக நிர்மாண ஒப்பந்தத்தின் எண்ணிக்கையை தனியான ஒப்பந்தமொன்றாக சீஈசீபீ இனம்கண்டிருந்தது.

**(ஆ) எல்கேஏஎஸ் 24 – தொடர்புபட்ட தரப்பினர்கள் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள்**

துணைக்கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் சீஈசீபீயின் முகாமையின் ஈடுபாடு அதாவது சீஈசீபீயின் பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) துணைக்கம்பனியின் நிதி முகாமையாளராக வேலையிலீடுதல் மற்றும் சீஈசீபீயின் தள அலுவலகங்களின் மேலதிகப் பொது முகாமையாளர்கள் துணைக்கம்பனியின் தள அலுவலகங்களின் செயற்பாட்டு முகாமையாளர்களாக வேலையிலீடுபடுதல் என்பன நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு டி1752 மற்றும் டி1459 ஆம் இலக்க செயற்திட்டங்கள் தொடர்பில் ஒப்பந்த முரண்களெதுவும் இருக்கவில்லை. எவ்வாறாயினும், பூர்த்தியாக்கல் சதவீத முறையை அடிப்படையாகக் கொண்டு 2014 ஆம் ஆண்டிற்கான அந்த செயற்திட்டங்களின் இலாபத்தைக் கணிப்பீடுசெய்வதிலுள்ள நிச்சயமின்மைகளுக்கான ஏற்பாடாக ரூபா 29,725,756 தொகை கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்ததன் விளைவாக மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 18,001,315 ஆல் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கம்பஹா தள அலுவலகத்திலுள்ள மிகுதியான இருப்பு உருப்படிகளின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட காசு ரூபா 248,180 தொகையாக இருந்த அதேநேரம் அவ் உருப்படிகளின் புத்தகப் பெறுமதி ரூபா 147,650 ஆக இருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் மேற்படி வித்தியாசம் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இலண்டனிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட அலுவலர்களின் பாவனைக்கான அலுவலக விடுதிகளின் நிர்மாணத்திற்கான ஒப்பந்த தொகை ரூபா 794,805,809 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது சீஈசீபீயினால் சமர்ப்பிக்கப்பட்ட கொடுப்பனவுச் சான்றிதழின் பிரகாரம், சான்றுறுதிப்படுத்தப்பட்ட வேலைகள் மற்றும் பெறப்பட்ட காசு என்பன முறையே ரூபா 762,904,603 மற்றும் ரூபா 543,902,642 ஆக இருந்தன. எவ்வாறாயினும், ரூபா 109,261,571 கடன்பட்டோர் மீதி மற்றும் ரூபா 4,652,095 வாடிக்கையாளருக்கு கொடுக்க வேண்டிய மீதி என்பன சர்வதேசப் பிரிவின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. ஆகையால், கடன்பட்டோர் மீதி மற்றும் வாடிக்கையாளருக்கு கொடுக்க வேண்டிய மீதி என்பன அதே தொகைகளால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) 2014 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட பொருட்களிற்காக செலுத்தப்பட்ட ரூபா 1,048,954 தொகை கடன்கொடுத்தோர் மீதியிலிருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் மீளாய்வாண்டிற்கான கடன்கொடுத்தோர் மீதி அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாண ஒப்பந்தங்களுடன் தொடர்புபட்ட ரூபா 4,086,494 மற்றும் ரூபா 210,597 ஆன முறையே பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தீர்க்கப்படாமல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட ஒன்பது செயற்திட்டங்களுடன் தொடர்புபட்ட ரூபா 701,343,919 ஆன சீராக்கப்பட்ட ஒப்பந்தப் பெறுமதி மீளாய்வாண்டின் ஒப்பந்த வருமானத்தை மதிப்பிடுவதில் கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நிர்மாண வருமானம் ரூபா 93,795,134 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

ரூபா 59,128,609 மற்றும் ரூபா 77,089,879 தொகையான முறையே பொறியியல் கொள்வனவு ஒப்பந்தப் பிரிவு மற்றும் உசாத்துணைப் பிரிவு என்பவற்றின் கடன்பட்டோர் மீதிகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக உள்ளதுடன் 2016 மார்ச் 31 வரையிலும் அந்த மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

சீஈசீபீயின் தள அலுவலகங்கள் உப ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகளை காண்பிக்குமாறு நிறுத்திவைத்தல் பணத்திற்கான பதிவேட்டை பேணியிருக்காததுடன் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு உப ஒப்பந்தகாரர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 20,888,711 நிறுத்திவைத்தல் பணத்திற்கான பட்டியல்

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் பணத்தின் சரியானதன்மை மற்றும் நம்பகத்தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான வரைபு வருடாந்த அறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1994 யூன் 04 இன் 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ஒதுக்கப் படிகள், வேதனப் படிகள் மற்றும் தொழில்சார் படிகள் போன்ற பல்வேறு படிகள் பொது திறைசேரியின் அங்கீகாரமில்லாமல் சீஈசீபீயின் நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படை ஊழியர்களிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட அத்தகைய படிகளின் மொத்தத் தொகை ரூபா 228,806,607 ஆக இருந்தது. |
| (இ) | 2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4:2:1 ஆம் வழிகாட்டல் | மீளாய்வாண்டிற்காக பிரதான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய டிஎம்ஏ/2002/(2) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 802(1) | சொத்துக்கள் பதிவேடு சீஈசீபீயின் வடக்கு வீதிப் பிரிவு மற்றும் சர்வதேச பிரிவு என்பவற்றால் போதிய தகவல்களுடன் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | நிதிப்பிரமாணம் 135 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களைத் தயாரித்தல், அங்கீகரித்தல் மற்றும் சான்றுறுதிப்படுத்துதல் என்பன சர்வதேசப் பிரிவின் ஒரே உத்தியோகத்தரால் செய்யப்பட்டிருந்தன. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சீஈசீபீ மற்றும் தொகுதிகளின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான முறையே ரூபா 584,746,149 மற்றும் ரூபா 610,013,445 ஆன நேரொத்த வரிக்கு முன்னரான தேறிய இலாபங்களுடன் ஒப்பிடுகையில் முறையே ரூபா 536,383,250 மற்றும் ரூபா 668,173,035 ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் நிதி விளைவுகளில் முறையே ரூபா 48,362,899 வீழ்ச்சியினையும் ரூபா 58,159,590 அதிகரிப்பினையும் சுட்டிக்காட்டுகின்றது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிர்மாணித்தல் வருமானம் குறைவடைந்தமையே சீஈசீபீயின் நிதிக்கூற்றுக்களில் இந்த வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீஈசீபீ அதன் 1,620 ஊழியர்களின் பதவியணியின் பலம் மற்றும் ரூபா 17,027,483,910 மொத்தச் சொத்துக்கள் அடிப்படை என்பவற்றை பயன்படுத்தி மீளாய்வாண்டின் போது ரூபா 536,383,250 வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை உழைத்திருந்தது. ஆகையால், சீஈசீபீ இன் மொத்தச் சொத்துக்களின் 3.15 சதவீதத்தை இலாபம் பிரதிநிதித்துவப்படுத்தியது.

(ஆ) நிர்மாணப் பிரிவின் வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 இல் ரூபா 13,042,021,420 இலிருந்து ரூபா 11,127,444,260 ஆக குறைவடைந்திருந்தது. இது 14.6 சதவீதம் குறைவடைந்தமையை பிரதிபலிக்கின்றது.

(இ) மீளாய்வாண்டின் செயற்பாட்டு இலாப எல்லை மற்றும் தேறிய இலாப எல்லை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 3.08 சதவீதம் மற்றும் 2.21 சதவீதமாக இருந்தன. ஆகையால், இலாப எல்லைகள் முறையே 0.25 சதவீதத்தாலும் 0.05 சதவீதத்தாலும் மாத்திரம் அதிகரித்திருந்தன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

-------------------------------------

**4.1 செயலாற்றல்**

---------------------

இலங்கையில் தேசிய தேவைகளை பூர்த்திசெய்வதற்காக உசாத்துணை வேலைகளை பிரதானமாக மேற்கொள்வதற்கும் அனைத்து தேவையான பௌதீக மற்றும் மனித வளங்களுடன் நிறுவப்பட்ட சீஈசீபீ உசாத்துணைப் பிரிவு அனைத்து வகையான பொறியியல் மதியுரைகளுடன் நாட்டிற்கு சேவைசெய்வதற்கும் 1973 இல் சீஈசீபீ உருவாக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது சீஈசீபீ உசாத்துணை வேலைகளிலீடுபடுவதை விட நிர்மாண வேலைகள் மீது பிரதானமாக கவனம் செலுத்தியிருந்தது.

2014 ஆம் ஆண்டிற்கான பணியகத்தின் செயற்பாட்டு வருமானத்தில் 15.8 சதவீதம் மாத்திரம் மதியுரைகளை வழங்குதல் தொடர்பாக உழைக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி நிர்மாண வேலைகளிலிருந்து உழைக்கப்பட்டிருந்தது. அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம், அரச பொறியியல் கூட்டுத்தாபனம், கட்டிடத் திணைக்களம் போன்ற எண்ணிக்கையான அரச உடைமை நிறுவனங்கள் நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கு காணப்படுகின்றன. ஆனால் சீஈசீபீ மற்றும் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் என்பவற்றால் மாத்திரம் உசாத்துணை வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகையால், பணியகம் ஆரம்பிக்கப்பட்ட போது ஒதுக்கப்பட்ட கட்டாயப் பணியாகவிருந்த பொறியியல் உசாத்துணை தொடர்பாக சீஈசீபீ மூலோபாயமானதாக கவனம் செலுத்தியிருக்கவில்லை, ஏனெனில் நிர்மாண வேலைகளில் வணிக விற்பனை மற்றும் வேலைகளின் அளவு உயர்வாக இருப்பதாக தோன்றுகின்றது. பொறியியல் உசாத்துணையை விட நிர்மாண வேலைகள் மீது சார்ந்திருக்கும் உயர் போக்கு, தேசிய நலனில் உள்ள பொறியியல் உசாத்துணை பகுதிகளில் திறம்பட செய்வதற்கு கட்டளை மூலம் வழங்கப்பட்ட மூலோபாய மற்றும் தனிப்பட்ட வாய்ப்பினை சீஈசீபீ அநேகமாக இழக்கலாம். ஆகையால், சீஈசீபீயின் பிரதான குறிக்கோள்களை அடைவதற்காக இந்த பிரிவில் அதன் நிபுணர்களை உயர்ந்தளவில் பயன்படுத்துவதன் மூலம் பொறியியல் உசாத்துணை வேலைகள் மீது சீஈசீபீ அதிகளவில் கவனம் செலுத்த வேண்டும்.

**4.2 சர்ச்சைத் தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கைகளில் அறிக்கையிடப்பட்டவாறு, 2012 இல் வீதிச் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு மூலதன மானியமாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து சீசீபீயினால் பெறப்பட்ட ரூபா 3,601 மில்லியன் பெறுமதியான சொத்துக்களில் ரூபா 250 மில்லியன் தொகை 2013 இல் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தக் கொடுப்பனவுகளிலிருந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மீளப்பெறப்பட்டிருந்தது. மேலும், இத்தகைய சொத்துக்களின் தொழில்சார் மதிப்பீடு எதுவும் மேற்கொள்ளப்படாமலும் ரூபா 3,351 மில்லியன் மானிய பங்கினை தவிர்க்காமலும் சீசீபீ ரூபா 250 மில்லியனை மாத்திரம் சொத்தாக கணக்கீடு செய்திருந்தது.

(ஆ) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டம் மற்றும் 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டம் என்பவற்றிற்கு முரணாக காசு அடிப்படையில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (என்பீரீ) மற்றும் பெறுமதி சேர் வரி (வற்) என்பவற்றை சீசீபீ செலுத்துகின்றது.

(இ) பணியகத்தின் பணிப்பாளர் சபை பொதுத் திறைசேரியிடமிருந்து முன் அனுமதி பெற்றுக்கொள்ளாமல் அதனுடைய பதவியணியினருக்கான ஊக்குவிப்புத் திட்ட எண்ணிக்கை மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் என்பவற்றை அங்கீகரித்திருந்தது.

(ஈ) சீசீபீயால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண ஒப்பந்தங்களின் 90 சதவீதம் அதன் துணைக்கம்பனி அதாவது வரையறுக்கப்பட்ட மத்திய பொறியியல் சேவைகள் - சீஈஸ்எல் அக் கம்பனியினை ஸ்தாபித்ததன் பிரதான நோக்கமாகவுள்ள போட்டிக் கேள்வியினூடாக ஒப்பந்தங்களை பெறுவதற்கு அவற்றை அனுமதிக்காமல் உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

மேற்படி வேலைகள் சீசீபீ இற்குச் சொந்தமான மனித, பௌதீக மற்றும் ஏனைய வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம் துணைக்கம்பனியால் மேற்கொள்ளப்பட்டிருந்தது அதாவது சீசீபீயின் ஒரே பதவியணியினரால் இரண்டு அமைப்புக்களிற்குமான அளவீட்டுப் பட்டியல்கள், மதிப்பீடுகள் மற்றும் சிட்டைகளினைத் தயாரித்தல் மேற்கொள்ளப்படுகின்றன என்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

**4.3 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வற் பதிவு இலக்கங்களின் செல்லுபடியாகும் தன்மை மற்றும் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட நேரத்தில் வற் சிட்டை என்பவற்றைப் பரீட்சிக்காமல் 40 ஒப்பந்தகாரர்களிற்கு சீசீபீயால் ரூபா 9,992,930 கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி (வற்) செலுத்தப்பட்டிருந்தது. பின்னர் ஒப்பந்தகாரர்களால் குறிப்பிடப்பட்ட வற் இலக்கங்கள் மற்றும் பெயர்கள் செயற்பாட்டிலில்லாதிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

(ஆ) அகுறகொடவில் பாதுகாப்பு தலைமையகத்தின் நிர்மாணத்திற்காக வழங்கப்பட்ட மதியுரைச் சேவைகளுடன் தொடர்புபட்ட ரூபா 169,932,979 கடன்பட்டோர் மீதி 2014 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. ரூபா 1,556,900,395 ஒப்பந்த விலையில் 2015 செப்தெம்பர் 18 இலேயே பாதுகாப்பு அமைச்சுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டிலிருந்து இந்த நிர்மாணத்திற்காக மதியுரை சேவைகளை சீசீபீ வழங்கியிருந்ததென மேலும் அவதானிக்கப்பட்டது.

**4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 யூலை 23 இல் நியம தொழில்நுட்பக் குழுவினால் அனுமதிக்கப்பட்ட 1235 ஆம் இலக்கத்தையுடைய செயற்திட்டத்தின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 115,428,867 ஆக இருந்தபோதிலும் அந்த செயற்திட்டத்திற்காக ஏற்பட்ட உள்ளபடியான கிரயம் ரூபா 133,100,436 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 126,908,006 தொகை மாத்திரம் வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்டிருந்தது. எனவே, இந்த செயற்திட்டம் மீது சீஈசீபீயிற்கு விளைந்த நட்டம் ரூபா 6,192,430 ஆக இருந்தது.

(ஆ) முறையற்ற கணக்கீடு மற்றும் மந்தமான ஒப்பந்த நிர்வாகம் என்பன காரணமாக பணியகத்தால் கையேற்கப்பட்ட 51 நிர்மாண ஒப்பந்த வேலைகள் தொடர்பில் மீளாய்வாண்டின் போது ரூபா 42,473,362 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.

**4.5 மனித வளங்கள் முகாமைத்துவம்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணியகத்தின் அங்கீகரித்த மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 1,620 மற்றும் 1,369 ஆக இருந்தன. அதற்கிணங்க, அவற்றில் 251 பதவிவெற்றிடங்கள் சகல ஊழியர் வகுதிகளிலும் உள்ள அனுமதிக்கப்பட்ட பதவியணியினரில் காணப்பட்டன. இந்த பதவிவெற்றிடங்களை நிரப்புவதற்கான போதுமான நடவடிக்கை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2014 – 2016 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2003 யூன் 02 இன் பிஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கிணங்க பின்வரும் முக்கிய அம்சங்களிற்காக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) பின்வரும் வகுதிகளின் கீழ் பணியகத்திற்குக் கிடைக்கக்கூடிய தற்போதைய வளங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.
- காணி மற்றும் கட்டிடம்
- தெரிந்த தொழில்நுட்பம் - எப்படி
- நிர்மாணம் மற்றும் செயற்பாட்டு வசதிகள்

(ii) முன்னைய மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவின் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) திட்டமிட்ட காலப்பகுதியினுள் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைதலின் பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நிர்மாணம் மற்றும் உசாத்துணைச் செயற்பாடுகளுக்காக விசேடமான உத்திகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

(v) பணிப்பாளர் சபையினால் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்கள் முன்னர் உரிய அதிகாரசபைகளால் அறிவித்தல் விடப்பட்டிருக்கவில்லை.

(vi) திட்டம் சுழலும் திட்டமாக வருடாந்தம் மீளாய்வுசெய்யப்பட்டிருக்கவில்லை.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான எண்களிற்கிடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சீஈசீபீயின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| (அ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | வீதிச் செயற்திட்டங்களிற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதியிலள்ளவாறு நிதிக்கூற்றுக்களிற்கு நியாயமாக பெறுமதியிடப்பட்டு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இருப்புக் கட்டுப்பாடு மற்றும் களஞ்சிய முகாமைத்துவம் | மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு வேலைத்தளத்திலுள்ள பொருளிருப்பு நிதிக்கூற்றுக்களிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | விலைப்பட்டியலிடல் | நிர்மாண ஒப்பந்தங்களின் உண்மையான வேலைகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | கடன்பட்டோர் மற்றும் பெறவேண்டியவைகள் | கூட்டுத்தாபனம் கடன்பட்டோர் மற்றும் பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. |
| (உ) | கணக்கீடு | சில கொடுக்கல்வாங்கல்கள் முறையாக கணக்கீடுசெய்யப்பட்டிருக்கவில்லை. |